சிங்கப்பூர்

# "COVID-19ஐக் காட்டிலும் டெங்கியிலிருந்து மீண்டுவந்தோருக்கு நீண்டகாலச் சுகாதாரச் சிக்கல்கள் ஏற்படும் சாத்தியம் அதிகம்"

வாசிப்புநேரம் - 1 நிமிடம்




(கோப்புப் படம்: AFP/Miguel Schincariol)

வெளியீடு : 26 Aug 2024 10:47PM

Aa

COVID-19 நோய்த்தொற்றிலிருந்து மீண்டுவந்தோரைக் காட்டிலும் டெங்கியிலிருந்து மீண்டுவந்தோருக்கு நீண்டகாலச் சுகாதாரச் சிக்கல்கள் ஏற்படும் சாத்தியம் அதிகம்.

இதயப் பிரச்சினைகள், நினைவாற்றல் குறைபாடு போன்றவை அவற்றில் அடங்கும்.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் நடத்திய புதிய ஆய்வில் அது தெரியவந்துள்ளது.

நாடு முழுதும் நடைபெற்ற ஆய்வில் டெங்கியால் பாதிக்கப்பட்ட 11,000க்கும் மேற்பட்டோரும் COVID-19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட ஒரு மில்லியனுக்கும் மானோரும் பங்கேற்றனர்.

2021ஆம் ஆண்டுக்கும் 2022ஆம் ஆண்டுக்கும் இடையில் அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

டெங்கி நோயாளிகளிடையே இதயச் சிக்கல்கள் ஏற்படக்கூடிய நீண்டகால அபாயம் 55 விழுக்காடு கூடுதல் எனக் கண்டறியப்பட்டது.

சீரற்ற இதயத் துடிப்பு, இதய நோய், ரத்தக் கட்டு ஆகியவை அதில் அடங்கும்.

கற்றல், நினைவாற்றல் குறைபாடுகள் ஏற்படும் அபாயம் இரண்டு மடங்கிற்கும் மேல் அதிகமாக இருந்தது.

*ஆதாரம் : CNA*